பொருளடக்கம்

பொருளடக்கம்

	பக்கம்
1. அறிமுகம்	01
2. தொலை நோக்கு	02
3. இலட்சியப் பணி	03
4. தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை	04
5. பிரதான அலுவலர் குழாம்	06
6. தவிசாளரின் மீளாய்வு	08
7. நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் 2010	10
8. நிதி அறிக்கை	14
8.1 ஐந்தொகை	14
8.2 வரவு செலவுக் கணக்கு	15
8.3 பரீட்சை மீதி	16
9. கணக்காய்வு அறிக்கை	18

01. அறிமுகம்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

2008ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது.

நகரக் குடியிருப்புகளின் அபிவிருத்திக்கு ஏற்புடைய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல், நிலைபேறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தியின் பொருட்டு குறைந்த வசதிகள் கொண்ட நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை தரமுயர்த்தல் மற்றும் அந்த மக்களுக்கு குறைந்த பட்ச நகரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தற்போதுள்ள வீட்டுக் கூறுகளை தரமுயர்த்தல் அல்லது மிகச் சிறந்த குடியிருப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தல் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் அடிப்படைக் குறிக்கோள்

தொலை நோக்கு

2. தொலை நோக்கு

"நிலைபேறான நகரக் குடியிருப்புகளில்

மேம்படட

வாழ்கைக முறையை உறுதிப்படுத்தல்.... "

03. இலட்சியப் பணி

இலட்சியப் பணி

நிறைவான நகர அபிவிருத்தி

திட்டமிடலுக்கமைய குறைந்த வசதிகள்

கொண்ட நகரக் குடியிருப்புகள் மற்றும்

நகர்சார்ந்த மக்களின் குடியிருப்பு

பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்கல்

அத்துடன் அதற்குச் இணையாக

அவர்களை சமூக, பொருளாதார மற்றும்

கலாசார ரீதியாக வலுவூட்டுதல்

04. தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை

2010.01.01 திகதி தொடக்கம் 2010.05.05 திகதி வரை பணிப்பாளர் சபை

	பதவி	பெயர்	நியமன திகதி
1	தவிசாளர்	திரு. பிரசன்ன குணவர்தன	2009-01-15
2	பணிப்பாளர் தலைமையதிபதி (பணிப்பாளர் சபை செயலாளர்)	திரு. ஜீ. ஜீ. கே. காமிணி	2009-02-02
3	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர	2009-02-18
4	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. திசா வீரபான	2009-02-18
5	பணிப்பாளர் சபை உறுப்பினர்	வித்தியாஜோதி. திரு. டப்ளியு. என். கெமுனு சில்வா	2009-02-18
6	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. எம். இசட். மொஹமட் றீசா	2009-02-18
7	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திருமதி. பத்ரானி ஜயவர்தன	2009-02-18
8	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. எச். பீ. சீ. ஹேரத்	2009-02-18
9	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. எஸ். எஸ். முதலிகே	2009-02-18
10	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. பிரசன்ன சில்வா	2009-02-18
11	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. ஏ. டப்ளியு. தயானந்த	2009-02-18

தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை

04. தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை

தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை

2010.05.24 தொடக்கம் 2010.12.31 திகதி வரையான பணிப்பாளர் சபை

	பதவி	பெயர்	நியமன திகதி
1	தலைவர்	சட்டத்தரணி திரு. பாலித கமகே	2010.05.24
2	பணிப்பாளர் தலைமையதிபதி (பணிப்பாளர் சபைச் செயலாயர்	வைத்தியர் திரு. சுமித் வன்னிஆரச்சி	2010.05.26
3	பணிப்பாளர் சபை உறுப்பினர்	வண. இத்தேகந்தே சந்தாதிஸ்ஸ தேரர்	2010.05.24
4	பணிப்பாளர் சபை உறுப்பினர்	வைத்தியர் திரு. நிஹால் ஜயதிலக	2010.06.15
5	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. ஜானக குருகுலசூரிய	2010.06.15
6	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. ஏ. டப்ளியு. தயானந்த	2010.07.07
7	பணிப்பாளர் சபை உறுப்பினர்	செல்வி. எம். ஐ. வீ. அமரசேகர	2010.07.28
8	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. பர்னாட் காரியவசம்	2010.05.24
9	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. ரனில் பிரியந்த பெர்னாந்து	2010.05.24
10	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. ஏ. எச். சுரேஷ் இந்திக்க	2010.05.24
11	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. அஜித் கித்சிறி பண்டார	2010.05.24
12	பணிப்பாளர் சபை உறுப்பினர்	திரு. சமிந்த குமார சுதசிங்ஹ	2010.05.24

பிரதான அலுவலர் குழாம்

பிரதான அலுவலர் குழாம்

2010.01.01 தொடக்கம் 2010.05.05 திகதி வரையான பிரதான அலுவலர் குழாம்

	பதவி	பெயர்	நியமன திகதி
1	பணிப்பாளர் தலைமையதிபதி	திரு. ஜீ. ஜீ. கே காமிணி	2009.02.02
2	பணிப்பாளர் (கருத்திட்ட முகாமைத்துவம், அபிவிருத்தி)	திரு. வை. ஆர். த சில்வா	2009.08.01
3	கணக்காளர்	திரு. எஸ். சுமந்திரன்	2009.05.07
4	பிரதான அக கணக்காய்வாளர்	திரு. என். ஜீ. பீ. டயஸ்	2009.10.01
5	சிரேஷ்ட பொறியியலாளர்	திரு. ஜீ. ஜே. குணசேகர	2009.10.01
6	சட்ட உத்தியோகத்தர்	திருமதி. டி.ஏ.தேவிகா திஸாநாயக	2009.11.01
7	சிரேஷ்ட கருத்திட்ட உத்தியோகத்தர்	செல்வி. பீ. எஸ். கமகே	2009.01.26

பிரதான அலுவலர் குழாம்

பிரதான அலுவலர் குழாம்

2010.05.06 தொடக்கம் 2010.12.31திகதி வரையான பிரதான அலுவலர் குழாம்

	பதவி	பெயர்	நியமன திகதி
1	பணிப்பாளர் தலைமையதிபதி	வைத்தியர் திரு. சுமித் வன்னிஆரச்சி	2010.05.26
2	பணிப்பாளர் (கருத்திட்ட முகாமைத்துவம், அபிவிருத்தி)	திரு. வை. ஆர். த சில்வா	2009.08.01
3	கணக்காளர்	திரு. எஸ். சுமந்திரன்	2009.05.07
4	பிரதான அக கணக்காய்வாளர்	திரு. என். ஜீ. பீ. டயஸ்	2009.10.01
5	சிரேஷ்ட பொறியியலாளர்	திரு. ஜீ. ஜே. குணசேகர	2009.10.01
6	சட்ட உத்தியோகத்தர்	திருமதி. டி.ஏ.தேவிகா திஸாநாயக	2009.11.01
7	சிரேஷ்ட கருத்திட்ட உத்தியோகத்தர்	செல்வி. பீ. எஸ். கமகே	2009.01.26

தவிசாளரின் மீளாய்வு

தவிசாளரின் மீளாய்வு

2008ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தால் தாபிக்கப்பட்ட இந்த அதிகாரசபையின் இரண்டாவது செயற்பாட்டு வருடமாக 2010ஆம் ஆண்டு காணப்படுகிறது. இதன் ஆரம்பத்திலும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கான பணியாட்தொகுதி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2010.12.30ஆம் திகதி சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 81 பேரைக் கொண்டமைந்த பணியாட்தொகுதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

2010ஆம் ஆண்டின் மே மாதம் தொடக்கம் புதிய தலைவரும் பணிப்பாளர் சபையும் நியமிக்கப்பட்டதோடு, புதிய பணிப்பாளர் சபை 2010ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் பணிகளை ஆரம்பித்தது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின்படி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்பட்ட குறைந்த செலவினத்தைக் கொண்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு பணவளிப்புச் செய்வதற்காக ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஒரு சதவீத சேவைக் கட்டணம் 2010ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் தொடக்கம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்படாததால், அதிகாரசபையின் பிரதான நிதி தோற்றுவாய் இழக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்நிலைமை தொடர்பாக நிதி அமைச்சுடன் கலந்துரையாடி மீண்டெழும் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதியினைப் பெற முடிந்தது. அதன்படி இடைநடுவில் ஸ்தம்பித்திருந்த நகரத்து திலிந்து நிவாச அறுணோதய, குசும் வீடமைப்புத்திட்டம் மற்றும் சேரிகள் அற்ற நகர நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற தொடர்ந்து வந்த நிகழ்ச்சித்திட்டங்களை இந்த ஆண்டில் பூர்த்தி செய்ய முடிந்தது. இத்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் 664 பயனாளிகளுக்கு வீடுகளும், கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே 334

பயனாளிகளுக்கும், மொறட்டுவ – அயிவன் வத்த, நுவரெலியா – பம்பரகலை, பதுளை–பதுளுபிட்டிய மற்றும் கயிலகொட சேரிகள் அற்ற நகர நிகழ்ச்சித்திட்டத்தின்

கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த 109 வீடுகளை அமைக்கும் பணிகளையும் பூர்த்தி செய்ய முடிந்தது.

புதிய கருத்திட்டத்தின் கீழ் 60 வீட்டுக் கூறுகளைக் கொண்ட பொரளை, பேஸ்லயின் மாவத்தை சிங்ஹபுர 2ஆம் கட்ட வீடமைப்புத் திட்டத்தின் பணிகளை ஆரம்பிக்க முடிந்தமையும் மொறட்டுவை நகர பிராந்தியத்தில் கடலரிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்களில் வாழும் சேரிப்புற மக்களுக்கென அடுக்கு மாடி வீடமைப்புத் திட்டம் ஒன்றின் தேவையும் இந்த ஆண்டில் கண்டறியப்பட்டது.

நகமு புறவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொரளை சஹஸ்புர வீடமைப்புத் திட்டம், பொரளை சிங்ஹபுர 2ஆம் கட்ட வீடமைப்புத் திட்டம், ஒறுகொடவத்த வதுளுசெவண வீடமைப்புத் திட்டம் போன்ற 03 வீடமைப்புத் திட்டங்களின் புனரமைப்பு பணிகள் சிலவற்றை நிறைவு செய்ய முடிந்தது.

நகரக் குடியிருப்பு வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை தரமுயர்த்தல் மற்றும் மனப் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் சமூக உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் பூர்வாங்கப் பணிகளை 2010 உலக குடியிருப்பு தினத்தை முதன்மையாகக் கொண்டு ஆரம்பிக்க முடிந்தது.

மேலும், இந்த ஆண்டில் முதன் முறையாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அடிப்படைக் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட கூட்டிணைத் திட்டமொன்றைத் தயாரிக்க முடிந்தது.

அதிகாரசபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதன் பணியாட்தொகுதிக்கு பயிற்சி வழங்கலையும், அதிகாரசபைக்கென நிதியமொன்றை உருவாக்குவதையும், துரிதகதியில் மேற்கொள்ள வேண்டிய பணியாகக் கருதி இரண்டாவது செயற்பாட்டு ஆண்டில் காணப்பட்ட வளங்களை ஆதாரமாகக் கொண்டு நிறைவேற்றப்படும் பணிகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைளுக்கான ஆயத்தம் தொடர்பாக தவிசாளர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறேன்.

சட்டத்தரணி பாலித கமகே
தவிசாளர்
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் 2010

*2010ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை கீழ்க் காணப்படும் 06 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

1.நகர திலிந்து நிவாச அருணோதய, குசும் வீடமைப்புத் திட்டம் - தொடர்ச்சி
2.சேரிகளற்ற நகர வீடமைப்புத் திட்டம் - தொடர்ச்சி
3.உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - தொடர்ச்சி
4.நகர வீடமைப்புத்திட்டம்
5.நகமு புரவர நிகழ்ச்சித்திட்டம்
6.2010 உலக குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டம்

1.நகர திலிந்து நிவாச அருணோதய, குசும் வீடமைப்புத் திட்டம் - தொடர்ச்சி

இது நகர மற்றும் அரை நகர பிரதேசங்களில் வசிக்கும் வீடுகளை அமைத்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ள பின்தங்கிய மக்களை மையமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட மக்கள் பங்கேற்பு வீடமைப்புத் திட்டமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் சமூக அடிப்படை அமைப்புகளின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, பயனாளிகளைக் கண்டறிதல், வீடமைப்புத்திட்டமிடல் மற்றும் நிர்மாணப் பணிகள் மக்களின் பங்கேற்புடன் செய்யப்பட்டுள்ளன. பயனாளி ஒருவருக்கு 125,000.00 ரூபா நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகளுக்காக மக்களின் உழைப்பு முழு அளவில் பெறப்பட்டுள்ளது.

அதன்படி 2009ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட குறித்த நிகழ்ச்சித்திட்டம் 2010ஆம் ஆண்டு இடைநடுவில் ஸ்தம்பிதமானது. 2010 ஏப்பிறல் மாதம் அமைச்சின் விடயப் பரப்பு மாறியதைத் தொடர்ந்து நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை நிர்மாணத்துறை, பொறியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதால் நகர அபிவிருத்தி அதிகாரசபை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேற்கொண்ட பணவனுப்பல் மேற்கொண்ட குறைந்த செலவிலான வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்காக ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து அறவிட்ட ஒரு சதவீத சேவைக் கட்டணம் ஏப்பிறல் மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டமை இதற்கு ஏதுவாக அமைந்தது.

அதன்படி மேற்படி சேவைக் கட்டணத்தைப் பயன்படுத்தி அப்போது நடைமுறையிலிருந்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஸ்தம்பிதமாயின. எனினும், பின்னர் கௌரவ நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் இடையீட்டின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் ஊடாக தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களாக இந்த வீடமைப்பு பணிகளை நிறைவு செய்வதற்காக எமது நிறுவனத்திற்கு 86,794 மில்லியன் ரூபா நிதியை விடுவித்தது.

கொழும்பு மாவட்டம் - தொடர்ச்சி

- கொழும்பு மாவட்டத்தில் 13 உள்;ராட்சி ஆளுகைப் பிரதேசத்தில் 664 வீடுகளை நிர்மாணித்தல் (மொத்தச் செலவு – 56,238 மில்லியன் ரூபா)

தொ இ	உள்;ராட்சி ஆளுகைப் பிரதேசம	நிர்மாணத்தை நிறைவு செய்த பயனாளிகள
1	ஹோமாகம பிரதேச சபை	51
2	மஹரகம நகர சபை	66
3	கெஸ்பேவ பிரதேச சபை	42
4	கடுவெல பிரதேச சபை	46
5	தெஹிவல-கல்கிசை மாநகர சபை	3
6	மொறட்டுவ மாநகர சபை	59
7	சீதாவகபுர நகர சபை	47
8	சீதாவக பிரதேச சபை	201
9	பொரலெஸ்கமுவ நகர சபை	9
10	கொடிகாவத்த - முல்லேரியாவ பிரதேச சபை	16
11	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை	13
12	கொலன்னாவ நகர சபை	10
13	கொழும்பு மாநகர சபை	101
		664
மொத்தம்		

கொழும்பு மாவட்டம் - தொடர்ச்சி

- மாத்தறை, குருநாகல், களுத்துறை, கம்பஹா, காலி, அம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 334 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படல். (மொத்தச் செலவினம் 18,695 மில்லியன் ரூபா)

தொ இ	மாவட்டம்	பயன்பெற்ற குடும்பங்கள்
1	.கம்பஹா	57
2	களுத்துறை	27
3	அம்பாறை	09
4	காலி	05
5	அம்பாந்தோட்டை	137
6	குருநாகல்	64
7.	மாத்தறை	35
மொத்தம்		334

2. சேரிகள் அற்ற நகர நிகழ்ச்சித்திட்டம் - தொடர்ச்சி

நகர மற்றும் அரை நகர பகுதிகளில் சேரிகளிலும் குடிசைகளிலும் வசிக்கும் மக்களை இலக்காகக் கொண்டு சேரிகள் அற்ற நகரம் எனும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு இங்கு வாழும் மக்களை உயர் தரத்திலான வீடு ஒன்றின் உரிமையாளராக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் உள்;ராட்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும் மக்களின் பங்கேற்புடனும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இங்கு அமைக்கப்பட்ட வீடுகளுக்காக 175,000.00 ரூபா தவணை அடிப்படையில் பயனாளிகளுக்கு கிடைத்ததோடு மக்களின் உழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி 2009ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறித்த நிகழ்ச்சித்திட்டம் 2010ஆம் ஆண்டு இடைநடுவில் கைவிடப்பட்டபோதும் மீண்டும் தொடரும் நிகழ்ச்சித்திட்டமாக 2010ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டம்	கருத்திட்டம்	வீடுகளின் எண்ணி	தொகை ரூ. மி
கொழும்பு	மொறட்டுவ அயிவன்வத்த	30	3,880
நுவரெலியா	பம்பரகலை	27	2,796
பதுளை	பதுளுபிட்டிய	37	4,000
	கயிலகொட	15	1,575
மொத்தம்		109	12,251

3 உட்கட்டமைப்பு வசதிகளை விருத்த செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - தொடர்ச்சி

இத்திட்டத்தின் நோக்கம் நகரப் பிராந்தியங்களில் அமைந்துள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வசதிகளைக் கொண்ட நகர குடியிருப்புகளில் மக்களின் பங்கேற்புடன் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்டன.

அதன்படி 2009ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறித்த நிகழ்ச்சித்திட்டம் 2010ஆம் ஆண்டு இடைநடுவில் கைவிடப்பட்டபோதும் மீண்டும் தொடரும் நிகழ்ச்சித்திட்டமாக 2010ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டம்	கருத்திட்டம்	விபரம்	தொகை ரூ மி
நுவரெலியா	பம்பரகெலே	துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல், மலம் மக்கல் தொட்டி அமைப்பு, குழாய் இடல், ஆதாரச் சுவர் அமைப்பு	2.5
மொத்தம்			2.5

4. நகர அடுக்கு மாடி வீடமைப்பு திட்டம்

மஹிந்த சிந்தனை தேசியக் கொள்கைக்கு அமைவாக நகரப் பிரதேசங்களில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளை அபிவிருத்தி செய்வதற்காக அடுக்குமாடி வீட்டுத்திட்ட யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, ரொறிங்டன் மாவத்தை 187ஆம் இலக்கத் தோட்டத்தில் வசிக்கும் 46 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக பொரளை பேஸ்லயின் மாவத்தை, சிங்ஹபுர 48ஆம் இலக்க அடுக்குமாடி வீட்டுத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்கத் திட்டவமைப்பு பணிகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

மொறட்டுவ நகரப் பிராந்தியத்தில் கடலரிப்பிற்கு உள்ளாகும் கரையோர சேரிவாழ் மக்களுக்கான அடுக்குமாடி வீட்டுத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க திட்டவமைப்புப் பணிகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

5 நகமு புரவர நிகழ்ச்சித்திட்டம்

கொழும்பு நகரிலுள்ள குறைந்த வசதிகள் காணப்படும் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதற்கமைய கீழே தரப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்காக இந்த ஆண்டில் 0.999 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

1.பொரளை, சஹஸ்ரபுர அடுக்குமாடி வீட்டத்திட்டத்தில் பாதுகாப்பு வேலி அமைப்பு.

2.பொரளை, சிங்ஹபுர வீட்டுத்தொகுதியில் பிரதான கழிவு நீர் அகற்றும் வடிகால் தொகுதியை மேம்படுத்தல்.

3.ஒறுகொடவத்த, வதுளுசெவண வீடமைப்புத் தொகுதியில் கழிவு நீரையும் மழை நீரையும் அகற்றும் வடிகால் தொகுதியைப் புனரமைத்தல் மற்றும் மின்மானி கட்டமைப்பு முறையாக நிறுவுதல்.

2010 உலக குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டம்

2010 உலக குடியிருப்பு தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட “முக்கால நோக்கு” கண்காட்சியுடன் இணைந்ததாக கொழும்பிலுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட 75 குடும்பங்களை இலக்காகக் கொண்டு வயதெல்லைகள் மூன்றினைக் கொண்டவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட திறந்த சித்திரப் போட்டியில் சுமார் 1300 சிறுவர்கள் பங்கேற்றிருந்தனர்.

மேலும் குடியிருப்புகளில் வசிக்கும் பிள்ளைகள் மற்றும் முதியவர்களை இலக்காகக் கொண்டு உலக குடியிருப்பு தின கருப்பொருளை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திறந்த சிறுவர் குறும் நாடகப் போட்டியில் 25 குடியிருப்புகளின் சாபாக 25 குறு நாடகங்கள் அரங்கேறின.

நிதி அறிக்கை

நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
31 டிசம்பர் 2010ம் திகதியில் ஐந்தொகை

2009		குறிப்பு	2010ம் ஆண்டிற்கான		
	சொத்துக்கள்				
	நிலையான சொத்துக்கள்				
672,911.43	மரத்தளபாடமும் பொருத்தியும்	1	1,142,639.18	330,546.19	812,092.99
588,762.17	அலுவலக உபகரணம்	2	1,053,666.50	328,986.53	724,679.97
			2,196,305.68	659,532.72	1,536,772.96
	நடைமுறைச்சொத்துக்கள்				
500,000.00	நிர்மாணங்களுக்கான முற்பணங்கள்				
10,000.00	முற்பணம்			50,000.00	
674,060.36	காசு மற்றும் வங்கி மீதி			29,266,556.80	
	காசு மற்றும் வங்கி மீதி			16,450.39	
	காசு மற்றும் வங்கி மீதி			3,139,000.00	
	ரீல் நிறுவனம்			7,597,195.67	40,069,202.86
2,445,733.96	**மொத்த சொத்துக்கள்**				41,605,975.82
	பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கங்கள்				
500,000,000.00	அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம்				5,000,000,000.00
3,388,468.92	U.S.I.P சொத்துக்கள்			3,388,468.92	
	நீண்டகால பொறுப்புக்கள்				
(5,192,654.63)	மிகை/குறை வருமானம்/செலவு			21,083,577.69	24,472,046.61
(1,804,185.71)					
	நடைமுறைப்பொறுப்புக்கள்				
	பிடிபணம்			191,722.40	
3,437,919.67	அட்டுறுச்செலவு	3		16,559,206.81	
812,000.00	பணிக்கொடை ஒதுக்கம்	4		383,000.00	17,133,929.21
2,445,733.96	**மொத்தப்பொறுப்புக்கள்**				41,605,975.82

இறுதி நிதிக்கூற்றினைத்தயாரிப்பது மற்றும் சமர்ப்பிப்பது நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைக்குழுவின் பொறுப்பாகும்.

பணிப்பாளர்(நிதி)	பணிப்பாளர் நாயகம்	தலைவர்
ந.கு.அ.அ.	ந.கு.அ.அ	ந.கு.அ.அ

நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

2010 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான வருமானச்செலவுக்கணக்கு

2009	மீதி வருமானச்செலவுகணக்கு 2009.12.31		(5,192,654.63)
	வருமானங்கள்		
	வீடமைப்புத்துறை அமைச்சு	117,219,000.00	
	தே.வீ.அ.அ.	1,000,000.00	
	ஐ.நா.ஹபிடட்	1,795,200.00	
148,545,294.29	வருமானம் (ந.அ.அ.நன்கொடை)	31,418,161.48	151,432,361.48
148,545,294.29			146,239,706.85
	செலவுகள்		
134,596,347.10	அபிவிருத்திச்செலவுகள்	89,684,680.06	
	நகமுபுரவர	999,880.00	
277,117.35	பிற அபிவிருத்திச்செலவுகள்		90,684,560.06
13,671,829.86			55,555,146.79
	நிர்வாகச்செலவுகள்		
7,315,622.86	சம்பளம்	17,144,285.62	
	பாதுகாப்பு	450,485.44	
	பணிப்பாளர் சபைக்கட்டணம்	214,220.00	
47,675.00	வேதனம்	45,500.00	
228,211.40	மேலதிக நேரக்கொடுப்பனவு	291,979.21	
57,430.00	பிற கொடுப்பனவுகள்	130,024.90	
240,712.75	பிரயாணச்செலவுகள்	73,787.20	
938,417.11	ஊ.சே.நி	3,291,260.60	
133,366.41	ஊ.ந.நி	398,088.95	
32,905.12	நலன்புரி நடவடிக்கை	167,426.16	
422,303.60	எழுதுகருவிகள்	236,806.39	
297,745.50	எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி	543,749.90	
9,560.00	செய்திப்பத்திரிகை	7,940.00	
36,645.00	முத்திரை	30,808.00	
279,011.11	தொலைபேசிக்கட்டணம்	323,747.26	
1,482,789.80	அலுவலக வாடகை	4,389,467.69	
	நீர்க்கட்டணம்	19,871.26	
621,914.79	அச்சு	506,743.82	
1,044,874.00	விளம்பரம்	79,150.00	
2,679,663.51	போக்குவரத்து	2,457,510.55	
60,841.56	மின்சாரம்	66,109.60	30,868,962.55
(2,257,859.66)			24,686,184.24
	பிற நெறிப்படுத்தல் செலவுகள்		
1,000,808.50	விழாச்செலவுகள்	789,253.00	
175,899.38	பிற செலவுகள்,உபசரிப்புச்செலவுகள்	126,189.00	
25,778.50			
401,091.24	பயிற்சிகளுக்கான செலவுகள்	356,954.35	
21,388.00	நுகர்வுப்பொருட்களின் கொள்வனவு	16,856.40	
101,850.00	கண்காட்சி செலவுகள்	1,450,200.00	2,739,452.75
(3,984,675.28)			21,946,731.49
	பிற செலவுகள்		
-98,368.91	அலுவலக உபகரணங்களின் திருத்தங்களும் பராமரிப்பும்	281,579.08	
77,338.76	சுத்திகரிப்புச்செலவுகள்	142,313.68	423,892.76
(4,160,382.95)			21,522,838.73
	ஒதுக்கங்கள்		
102,018.35	மரத்தளபாடம் பொருத்திகளுக்கான பெறுமானத்தேய்வொதுக்கம்	228,527.84	
118,253.33	அலுவலக உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வொதுக்கம்	210,733.20	439,261.04
812,000.00	பணிக்கொடைக்கான ஒதுக்கம்		
(5,192,654.63)	குறை வருமானம்/செலவு/மிகை		**21,083,577.69**

நகர வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை – 2010.12.31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று

மொத்த பெறுகைககள்		153,432,361.48
தொழிற்பாட்டு நடவடிக்கைகள்		
நிருவாகச் செலவுகள்	32,459,322.12	
நேரில் அபிவிருத்தி நடவடிக்கைகள்	423,892.76	
நேரில் தொழிற்பாட்டு நடவடிக்கைகள்	2,739,452.75	
முற்பணம்	50,000.00	35,622,667.63
		117,809,693.85
முதலீட்டு நடவடிக்கைகள்		
அபிவிருத்திச் செலவுகள்	77,730,703.59	
நிலையான சொத்து	733,847.40	
றீல்	7,597,195.67	86,061,746.66
		31,747,947.19
		31,7117,947.19
		674,060,100
தொடக்க காசு மீதியும் வங்கி மீதியும்		32,422,007.19
2010.12.31இல் இறுதி காசு மீதி		

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன்படி நேரடியான காசுப்பாய்வுக் வழிமுறையினைப் பின்பற்றி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதிச்சட்டம் 14(2)C பிரிவிற்கமைய

கணக்காய்வுத் தலைமையதிபதி அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / My No. ரீஎச் /பீ/யூஎஸ்டீஏ/எப்ஏ/01/2010

මබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2011 யூன் 24

தலைவர்,
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று தலைவருக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2691151

சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451

INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் என்பவற்றை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1. அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர்ந்தபட்ச தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.1.1 அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம்

2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 16(3) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருந்ததுடன் அது பகுதி அடிப்படையில் அரசாங்க திரண்ட நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முடிவடைந்திருந்த நிலையிலும் அம் மூலதனம் திரட்டப்பட்டிருக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிறுவனம் தொடர்ந்திருத்தல் எண்ணக்கரு

2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 16(உ) ஆம் உபபிரிவின் பிரகாரம் குறைந்த செலவிலான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிதி வழங்குவதற்காக சொத்துக்களை அபிவிருத்தி செய்பவர்களிடமிருந்து சேவைக்கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகையும் அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் 2010 மார்ச் இற்குப் பின்பு அதிகாரசபைக்கு அந்நிதி கிடைத்திருக்கவில்லை. மேலும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச்சேவைக் கட்டணம் அறவிடுவது நிறுத்தப்படடிருந்த காரணத்தினால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான வருமான மூலம் தடைப்பட்டிருந்ததுடன் இக்காரணத்தினால் அதிகாரசபையின் தொடர்ந்திருத்தல் தன்மை திறைசேரியின் நிதி உதவியில் தங்கியிருந்தது.

2.2.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03

பின்வரும் பிரகாரம் நியமங்களுக்கு முரணாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

I. கிடைக்க வேண்டிய சேவைக் கட்டணமான வருமானமானது செலுத்த வேண்டிய கட்டிட வாடகையிற்கு எதிராக ஈடு செய்யப்பட்டிருந்தது.

II. நிதிக்கூற்றுக்களில் பகுதியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதனத்தின் கூற்று சமர்ப்பிக்கப்படாமை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 09

நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 16

பணிக்கொடை நிதி திரட்டப்பட்டு அந்நிதி முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 187 பெயருடைய வட்டார வீடமைப்புத்திட்டத்தின் நிர்மாணங்கள் தாமதமாகிய காரணத்தினால் உரிய வீட்டுரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மேலதிக தொகையான ரூபா 1,564,000 இற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் செலுத்த வேண்டியிருந்த தொகை ரூபா 200,785 ஆக இருந்த போதிலும் அது ரூபா 257,100 ஆக ரூபா 56,315 தொகையினால் அதிகரித்து கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது. இதனால் வருடத்தின் பெறுமானத் தேய்வும் ரூபா 11,263 இனால் அதிகரித்து கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய சீஎம்/07/0140/226/013 ஆம் இலக்க அமைசரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட்டவுடன் ரீல் நிறுவனம் உடனடியாகக் கலைக்கப்பட்டு அதன் பதவியினர் மற்றும் சொத்துக்கள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அது சம்பந்தமாக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அவசியமான நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிறுவனத்தைக் கலைத்து அதன் பதவியினர் மற்றும் சொத்துக்களை அதிகாரசபைக்கு கையளிப்பதிலுள்ள தாமதத்திற்கு நாளாந்த நடவடிக்கைகளிலுள்ள தாமதம் மற்றும் கம்பனியிடம் காணப்பட்ட பாரியளவிலான பொறுப்புக்கள் போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்ததாக தலைவரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2002 மே 24 இன் PF/PE 21 ஆம் இலக்க் அரச நிதிச் சுற்றுநிருபம்	வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் மீளாய்வாண்டின் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.
(ஆ)	நிதிப்பிரமானம்(நி.பி)	
	நி.பி 133	அதிகாரசபையினால் உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை

3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 21,083,578 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை தவறாக வருமானத்திற்கு எதிராக சீராக்கப்பட்டமையினால் ரூபா 26,276,233 மிகையாக இருந்தது. முன்னைய ஆண்டின் ரூபா 5,192,655 தொகையான பற்றாக்குறையுடன் ஒப்பிடுகின்ற போது ரூபா 31,468,888 ஆன அதிகரிப்பைக்காட்டியது. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியின் போதும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்படாமையினால் இவ்வாறான நிலைமை உருவாகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கீழே காட்டப்படுகின்ற செயற்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த 1 % சேவைக் கட்டணம் கிடைக்காமையினால் இந்நிலைமை ஏற்பட்டிருந்ததாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

செயற்திட்டங்கள்	2010 ஆம் ஆண்டில் செயற்படுத்தவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை	பெறுமதி (ரூபா. மில்லியன்)
தற்காலிக வீடுகள்	2,750	340.0
தற்காலிக வீடுகள்(மாற்றக்கூடிய)	1,549	111.1
ஓலைக்குடிசைகளற்ற நகர நிகழ்ச்சித்திட்டம்-புதிய	200	20.3
தொடர் வீடுகள் (மாற்றக்கூடிய)	133	9.0
187 தோட்ட தொடர்மாடி வீடுகள்	56	167.1
கொழும்பு நகரத்தில் 40,000 தொடர்மாடி வீடுகள்	40,000	1200.0
மொத்தம்		1847.5

(ஆ) இதன்பிரகாரம் அதிகாரசபையினால் நிதிஏற்பாடு பெறுவதிலுள்ள இயலுமை சம்பந்தமாக சாத்தியத்தை கவனத்திற்கொள்ளாமல் தான்தோன்றித்தனமாக செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மேலும் நிதிக்கூற்றுக்களில் அபிவிருத்தி செலவாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 85,219,680 தொகையானது எதுவித புதிய செயற்திட்டங்களுக்குரியதாக இல்லாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் எஞ்சிய பகுதி வேலைகளுக்காக செய்யப்பட்ட செலவினமாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

3.2.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்காக 2010 ஆம் ஆண்டினை மேவும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 187 தோட்ட மீள்புனரமைப்பு செயற்திட்டம்

(I) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 52 பேர்ச்சஸ் காணியினைக் கையளிப்பது சம்பந்தமாக எவ்வித எழுத்துமூல ஒப்பந்தமுமின்றி அக்காணியினை உத்தேச வீடமைப்புத்திட்ட நிர்மாணிப்புக்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட 46 குடும்பங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதன் பிரகாரம் ரூபா 46 இலட்சம் தொகையில் 46 குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(II) 2009 திசெம்பர் 02 ஆந் திகதி நகர குடியிருப்பு அதிகாரசபை மற்றும் உரிய வீட்டுரிமையாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 7 (iii) ஆம் பிரிவின் பிரகாரம் மேலே கூறப்பட்ட திட்டத்தை முடிவுறுத்துவதற்கான காலம் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்களை விஞ்சுமாயின் விஞ்சுகின்ற மூன்று மாதம் அல்லது அதற்குக்குறைவான காலத்திற்காக இரண்டாம் தரப்பினருக்கு இவ் ஒப்பந்தத்தின் ஆரம்ப திகதியிலிருந்து 10 மாதத்திற்குள் ரூபா 33,500 தொகையினை முழுமையாக ஒரே தடவையில் செலுத்தி முதலாம் தரப்பினருக்கு அதிகாரசபையினால் வழங்கப்பட வேண்டும் இது வரையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடத்தினைக் கடந்திருந்த போதிலும் எவ்வித அபிவிருத்தி செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படாத நிலைமையில் ஒப்பந்தப்பிரகாரம் இரண்டாம் தரப்பினரால் வீட்டுவாடகை கேட்பதற்கு அல்லது அதிகாரசபைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க்கூடிய நிலைமை உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.2.5 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

முறையான திட்டமிடலின்றி அதிகாரசபையினால் 187 பெயருடைய தோட்ட வீடமைப்புத் திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணிப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எதனையும் எடுப்பதற்கு சபையினால் இயலாதிருந்தது. அவ்வாறே அதிகாரசபையினால் இரண்டாம் தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தமையினால் எதிர்காலத்தில் நிதிசார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவதானிக்கப்பட்டது. அரச சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் போது அதிகாரசபையினால் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

3.2.6 மனிதவள முகாமைத்துவம்

அதிகாரசபை உருவாக்கப்பட்டு 02 வருட காலம் கடந்திருந்தும் அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் பதவிகள் தவிர மற்றைய பதவியினர் 73 பேரும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஏற்கனவே ஆளனிக் கோப்பிற்கான அங்கீகாரம் பெறப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படுவதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

3.2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையினால் ஆண்டின்போது வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை பெறப்பட்டமைக்காக ரூபா 2,457,511 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 2002 ஒக்தோபர் 11 ஆந் திகதிய கொள்கைத்திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சினால் விடுக்கப்பட்டிருந்த எம்பீடீஐ/எம்பீஆர்டீ/வீஈஎச் ஆம் இலக்க சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரீல் நிறுவனத்திற்குச் சொந்தமான வீடமைப்புத்திட்டங்களை புணர்நிர்மானம் செய்வதற்காக மற்றும் ரீல் நிறுவனத்தின் ஊழியர்களுக்காக சம்பளம் செலுத்துவதற்காக அதிகாரசபையினால் செலவு செய்யப்பட்ட ரூபா 7,597,196 தொகையானது நடைமுறைச் சொத்தாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நடவடிக்கைக்காக வீடமைப்பு நிர்மாண பொறியியல் சேவை மற்றும் பொது வசதிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடுகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்துக்குக் காலம் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) மூலதன ஈடுபடுத்தல்
(ஆ) கணக்கீடு
(இ) முகாமைத்துவ அபிவிருத்திச் செலவினம்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்

எச்.ஏ.எஸ்.ஸமரவீர
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி